## <u>பத்திரிக்கை செய்தி – 1</u>

பாட்டாளி மக்கள் கட்சியினுடைய நிறுவனர் – தலைவர் மருத்துவர் அய்யா அவர்களுடைய ஆணையின்படி விடுக்கும் செய்தியாகும்.

பாட்டாளி மக்கள் கட்சியினுடைய பதிய தலைவராக நம்முடைய நிறுவனரே கடந்த 30.5.2025 முதல் பொறுப்பேற்று இருப்பதாலும் பொறுப்பேற்று பாட்டாளி மக்கள் கட்சியை புனரமைக்க நியமனங்களை செய்து பலவேறு நிகழ்வுகளையும் செய்து வருகின்றார்கள். செயற்குழு சிறப்பாக நடத்தப்பட்டது. அதற்கு முன்பாக நிர்வாகக்குழு நடந்தது. தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மற்றும் வருகிற ஆகஸ்ட் 10-ஆம் தேதி பூம்புகாரில் மாநில மகளிர் மாநாடு நடத்தவிருக்கிறோம். இந்த சூழலில் நம்முடைய கட்சியினுடைய தலைமை அலுவலகம் சென்னையில் இருந்ததை மாற்றி 30.5.2025 முதல் தைலாபுரம் தோட்டத்திலேயே தலைமை அலுவலகம் இயங்கிவருகிறது. தொண்டர்களும் மற்ற தலைவர்களும் வேறுளங்கும் நம்முடைய தலைமை அலுவலகம் இல்லை என்பதை தெரிந்துகொண்டு தலைமை அலுவலகம் தைலாபுரத்தில்தான் இருக்கிறது என்று தெளிவாக தெரிந்து கொண்டு அனைவரும் தைலாபுரம் தோட்டத்திற்கு வந்து தலைமை

அலுவலக பணிகளுக்காக வரவேண்டி சொல்லப்படுகிறது. இந்த தலைமை அலுவலகம் என்பது முக்கியமான இடம் என்பதால் இதை அனைவரும் தெரிந்துகொள்ள வேண்டும். வேறு எங்கும் யாரும் எந்த விதமான தலைமை அலுவலகத்தையும் சென்னையிலோ வேறு எந்த ஊரிலோ வைத்திருக்க கூடாது வைத்திருந்தால் அது சட்டத்திற்கு புறம்பானது என்பதை தெரிந்துகொள்ள வேண்டும் என்று தெரியப்படுத்தப்படுகிறது.

## பத்திரிக்கை செய்தி - 2

நம்முடைய பாட்டாளி மக்கள் கட்சியினுடைய புதிய தலைமை நிலைய நிர்வாகிகள் மற்றும் மாநில தலைவர் பொறுப்பு 30.5.2025 முதல் மாற்றி அமைக்கப்படுகிறது. நம்முடைய நிறுவனர்-தலைவர் மருத்துவர் அய்யா அவர்களின் ஆலோசனையின்படியும் நம்முடைய சிறப்பு பொதுக்குழு முடிவு செய்தபடியும் மாநிலத்தின் தலைவராக நம்முடைய நிறுவனர் மருத்துவர் அய்யா அவர்களே கடந்த 30.5.2025 முதல் செயல்பட்டுவருகிறார்கள். அதுமட்டுமல்லாமல் கௌரவத் தலைவராக சட்டமன்றக் கட்சித்

தலைவரும் சட்டமன்ற உறுப்பினருமான ஜி.கே.மணி அவர்களும், செயல் தலைவராக மருத்துவர் இரா.அன்புமணி அவர்களும் பொருளாளராக எஸ்.சையத் மன்சூர் உசேன் அவர்களும், பொதுச் செயலாளராக முரளி சங்கர் அவர்களும் நியமிக்கப்பெற்று அவர்களது பணியை செவ்வனே செய்து வருகிறார்கள். இது தேர்தல் கமிஷனுக்கும் மற்ற சம்பந்தப்பட்ட துறைகளுக்கும் 30.5.2025 அன்றே அனுப்பப்பட்டுவிட்டது அதன்படி அனைவரும் பொறுப்பேற்று அவரவர் பணியை செய்து வருகிறார்கள். இதற்கிடையில்

யாராவது அந்த பணியை செய்ய விடாமல் செய்தாலோ அல்லது அந்த பணிக்கு தான்தான் பொறுப்பாளர் என்ற வகையிலே பேசிக்கொண்டிருந்தாலோ அவர்கள் எல்லாம் கட்சியினுடைய விதிகளுக்கு உட்படுத்தப்பட்டு ஒழுங்கு நடவடிக்கைகுழுவுக்கு உட்படுத்தப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படுவார்கள் என்பதை கட்சியினர் தெரிந்துகொள்ள வேண்டும். எனவே தேர்தல் ஆணையத்திற்கு புதிய பொறுப்பாளர்கள் பெயர்கள் ஏற்கனவே அனுப்பித்துவிட்ட வகையில் யாரும் இந்த பொறுப்பை தவறுதலாக தங்களுக்கு என்று

புதிதாக அதிகாரமில்லாமல் நியமனம் செய்துகொண்டு அதிகாரமில்லாமல் பவனிவந்தால் சட்டத்திற்கு புறம்பானது மட்டுமல்ல கட்சி விதிகளுக்கு புறம்பானது என்பதை அனைவரும் தெரிந்துகொள்ள வேண்டும். இது நம்முடைய கட்சியினுடைய தலைவர்களுக்கும் தொண்டர்களுக்கும் தெரிவிக்கப்படுவது. அதை மீறினால் அப்படி செய்யும் அனைவரும் கட்சியின் விதிக்கு உட்பட்டு உடனடியாக கட்சியிலிருந்து நீக்கம் செய்யப்படுவார்கள் என்பதையும் தெரியப்படுத்திகொள்கிறோம்.